# திருப்பாவையில் காணப்படும் திருமாலின் திருப்பெயர்கள்

## The Deity Names of Tirumāl in Tiruppāvai

சந்துரு முத்தையா / Chandru Muthiah[1]
சி அருளா சித்திரை / S Arulla Sitiray[2]

Date of submission: 2024-09-112
Date of acceptance: 2024-10-23
Date of Publication: 2024-12-30
Corresponding author's Name:
Chandru Muthiah
Email: chandruchan@yahoo.com

**Abstract**

The purpose of this study for examines the various deity names of the Perumal found in the Thirupavai composed by Andal, one of the twelve Alvars. The literature review system is dealt with in this study which deals with the qualitative strategy. Primarily manipulated texts, textbooks, dissertations, and dissertations on the original text of the Four Thousand Divine Prabhupada. This study finds that Lord Andal called Lord Vishnu's by different names in his hymns in Tirupavai and divides it into 5 parts. This review examines the purpose and factor behind the song 'Thirumalini Andal Bhakti' sung under different names. It has been found and compared that other Alvars in their psalms used the same name for the same reason as Thirupavai in the same way as Andal Thirumal's name in Thirupavai.

**Keywords:** Thirupavai, Alvars, Andal, Thirumal, Deity names

### முன்னுரை

இந்து சமயம் உலக சமயங்களில் மிகவும் பழமையான சமயமாகும். இந்து சமயத்தைத் 'சனதான தருமம்' என்று கூறுவர். இதற்கு தொடக்கம் இல்லாமல் தொடரும் கொள்கை என்று பொருள்படும் *(Devarajan, 2002)*1. மேலும், வேதத்தை அடிப்படையாகக் கொண்டதால் வேத சமயம் என்றும் வைதீக சமயம் என்றழைப்பதும் உண்டு. சைவ சமயத்திற்குப் பிறகு சிறப்பாகத் திகழ்வது வைணவ சமயமாகும். வைணவம் விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயமாகும். 'விஷ்ணு' என்றால் எங்கும் பரவி நிற்பவன் எனப் பொருள்படும். விஷ்ணுவை வணங்கும் மார்க்கம் வைணவ நெறி. வைணவ நெறிக்கு 'திருமால் நெறி' 'திருமாலியம்' என்ற வேறு பெயர்களும் உண்டு *(Kannan, 1994)*.

வைணவ சமயத்தைத் தழைத்தோங்கச் செய்தவர்கள் பன்னிரு ஆழ்வார்கள். இவர்கள் திருமாலைப் போற்றி பல பாசுரங்களைப் பாடியுள்ளனர். இப்பாசுரங்களைப் தொகுத்த ஆசாரியர்கள் இதற்கு 'நாலயிரத் திவ்விய பிரபந்தம்' என்று பெயரிட்டுள்ளனர். நாலாயிரம் பாசுரங்களைக் கொண்டிருப்பதால் நாலியிரத் திவ்வியப் பிரபந்தம் என்ற பெயர்பெற்றது.

[1]The author is a research candidate in the Sultan Idris Education University, Tanjong Malim, Perak, Malaysia. chandruchan@yahoo.com

[2]The author is a teacher in Linggi National School, Port Dickson, Negeri Sembilan, Malaysia. arulla_1006@yahoo.com

அதோடு, ஆழ்வார்களின் பிரபந்தங்கள் தெய்வத்தைப் பற்றி விளக்குவதால் இதனை ‘திவ்ய பிரபந்தங்கள்’ என்ற சிறப்பான பெயரைக் கொண்டும் அழைக்கின்றனர். ‘ஆறாயிரப்படி’, ‘குருபரம்பரை’, ‘கலியனருள்பாடு’ மற்றும் ‘கோயிலொழுகு’ போன்ற நூல்களில் திவ்வியப் பிரபந்தம் என்று பெயர் காணப்படுகிறது (Sinivasan, 2001)3. இப்பாடல்கள் நாதமுனிகள் நான்கு தொகுதிகளாக்கி, ஒவ்வொரு தொகுதியிலும் ஆயிரம் பாசுரங்கள் முறைப்படுத்தியுள்ளார். அவற்றுள் முதலாயிரத்தில் மொத்தம் பத்து பிரபந்தங்களில் ஒன்றானது திருப்பாவை ஆகும் (Sujatha,2000)4.

ஆழ்வார்கள் பன்னிருவரில் ஒரே பெண்ணானவர் ஆண்டாள். ஆண்டாளுக்குச் சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும் பெயர் உண்டு. இவர் கி.பி எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். ஆண்டாள் அருளிய பாமலைகளுள் திருப்பாவை திருமாலின் புகழ் பாடும் ஓர் எளிய மற்றும் எளிதில் பொருள் விளங்கக்கூடிய நூலகவும் அமைந்துள்ளது எனலாம். இத்திருப்பாவையைத் திருமாலின் மேல் பக்தி கொண்டு மார்கழி நோன்பு நோற்கப் ஆண்டாளால் பாடப்பட்டது.

தொடர்ந்து, திருப்பாவைக்கு அறிஞர்கள் கூறும் பொருள் யாது எனக் காண்போம். (Devarajan, 2002)1 ‘திரு’ என்ற சொல்லுக்குத் தெய்வத்தன்மை மற்றும் ‘பாவை’ என்ற சொல்லுக்கு காத்யாயனி எனும் தேவிக்குச் செய்யப்படும் வழிபாடு முறை என்கிறார். (Balasubrmaniam, 1994)5 அவர்கள் ‘திரு’ என்னும் சொல்லுக்கு இலக்குமி, செல்வம் மற்றும் மேன்மை என்றும் ‘பாவை’ க்குப் பதுமை என்று பொருளிடுவதைக் காண இயலுகிறது.

## 2.0 ஆய்வின் நோக்கம்:

1. திருப்பாவையில் திருமாலின் திருப்பெயர்களை அடையாளம் கண்டு பகுத்தல்.

2. திருப்பாவையில் திருமாலின் திருப்பெயர்களின் காரணிகளைக் கண்டறிதல்.

3. திருப்பாவையில் ஆண்டாள் கருதும் திருமாலின் பெயர்களை மற்ற ஆழ்வார்கள் கூறும் பெயருடன் ஒப்பிடுதல்.

## 3.0 ஆய்வின் அணுகுமுறை

இவ்வாய்வு நூலக ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டது ஆகும். திருப்பாவை இலக்கிய வடிவமைப்பு பெற்றுள்ளதால் ஆய்வாளர் பண்புசார் அணுகுமுறையினைப் பயன்படுத்தியுள்ளார். பண்புசார் அணுகுமுறை மூலம் ஆய்வாளர் திருப்பாவையில் காணப்படும் திருப்பெயர்களை ஆய்வு செய்ய ஏதுவாக அமைந்துள்ளது. ஆய்வின் வினாவிற்கு விடையளிக்க ஆய்வாளர் ஆண்டாளின் திருப்பாவை உட்பட மற்ற ஆழ்வார்களின் படைப்பான திருமாலை, முதல் திருவந்தாதி, இரண்டாந் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி, நான்முகன் திருவந்தாதி, திருச்சந்தவிருத்தி ஆகிய நூல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவாய்வில் 1952 ஆம் ஆண்டில் அண்ணங்கராசாரியார் திருப்பாவை எனும் நூலையும் மற்றும் கமலகண்ணன், 2001 ஆம் ஆண்டில் இயற்றிய நாலாயிரத் திவ்விய பிரபந்தம் மூலமும் விளக்கமும் எனும் நூலினை முதன்மையாகக் கொண்டு அதனுள் காணப்பட்ட ஆழ்வார்களின் பாசுரங்களை ஆய்வு செய்து வடிவமைகப்பட்டது ஆகும்.

## 4.0 முன்னைய ஆய்வுகள்

(Soundara, 1978) தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக சார்பில் வெளியீடு கண்ட, பத்தாவது இலக்கிய கருத்தரங்கு ஆய்வுக் கோவையில் ‘திருப்பாவை’ என்ற கட்டுரையை எழுதியுள்ளார். உலகம் வாழ, பொதுநல நோக்கோடு சமுதாயச் சீர்கேடுகளைத் துணிவோடு எதிர்த்து ஒழிக்க, பெண்மை எழுச்சி பெற ஒரு விரதமாகத் திருப்பாவையைக் ஏற்க வேண்டும் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

வாழ்க்கையின் குறிக்கோளனது இறைவனுடன் இரண்டறக் கலத்தலாகும். இவ்வகையில் (Tharmika, 2016)7 இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஆண்டாள் பாடல்கள் மற்றும் கிறிஸ்துவ இனிமைமிகு பாடல்களில் காணப்படும் அனுபூதிகருத்துகளை ஆராய்ந்து

ஒற்றுமை மற்றும் வேற்றுமையை ஆராய்ந்துள்ளார். (Periyasamy, 2020) ஆழ்வார்களின் பக்தியை மாட்டிலும் ஆண்டாளின் பக்திநெறி காதல் உணர்வாக வெளிப்பட்டுள்ளதை விவரிக்கின்றார். புறத்தூய்மையுடனும், அகத்தூய்மையுடனும் ஒழுங்கு நெறியைக் கடைபிடித்து, அதிலிருந்து வழுவாமல் வாழசெய்கிறது திருப்பாவை என்கிறார். உயரிய கொள்கையும், பொதுநலநோக்கும் கொண்ட பக்திநெறி வாழ்வியலை எங்கணம் எடுத்துரைத்துள்ளது என்பதனை ஆண்டாளின் பசுரங்கள் வழி ஆய்வு செய்துள்ளார்.


### 5.0 ஆய்வின் வரையறை

ஆண்டாள் பாடிய திருப்பாவை வைணவ கடவுளான திருமால் மீது பக்திபால் உருவெடுத்த சமய நூலாகும். திருப்பாவை நூலனது பாவையின் நோம்பு, ஆண்டாள் புரிந்த யாகம், தோழிமார்களைத் துயல் எழுப்புதல், நோம்பிற்கு தகுந்தது தகாதது எனப் பல கூறுகளைக் கொண்டிருந்தாலும், இவ்வாய்வனாது திருப்பாவையில் ஆண்டாள் கையாண்டா திருமாலின் திருப்பெயர்கள் மட்டுமே காரண காரணிகளுடன் ஆராயப்பட்டுள்ளன. ஆண்டாள் பாடிய பாடல்களில் காணப்படும் திருமாலின் திருப்பெயர்கள் திருமாலை, முதல் திருவந்தாதி, இரண்டாந் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி, நான்முகன் திருவந்தாதி, திருச்சந்தவிருத்தி ஆகிய நூல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 6.0 ஆய்வில் கண்டறியப்பட்டது

திருப்பெயர் அல்லது திருநாமம் என்பது வைணவ சமயத்தைச் சார்ந்தவர்களுக்கு இன்றியமையாத ஒன்றாகும். வைணவர்கள் திருமாலின் 12 நாமத்தைக் கூறி உடலில் 12 இடங்களில் திருமண் காப்பு அணிவார்கள். அவர்கள் அவ்வாறு அணியும் போது இறையருள் மேலோங்கிறது, உடல் தூய்மையடைகிறது எனவும் கருதுவதுண்டு. அத்தகைய உறுப்புகள் நெற்றி, வயிறு, மார்பு, கழுத்து, வயிற்றின் இடப்பக்கம், இடது புஜம், இடத்தோள், முதுகு மற்றும் பிடரி ஆகும் (Jayasree Mugambikai, 2001).

திருப்பாவையில் திருமாலின் பெயர்களின் பகுப்பினை ஐந்தாகப் பிரிக்க இயலும். அவையானது:




படம் 1: திருப்பாவையில் திருமாலின் பெயர்களின் பகுப்பு முறை

திருப்பாவையில் ஆண்டாள் பெருமாலின் திருநாமத்தைக் குறிப்பிட்டதுபோல மற்ற ஆழ்வார்களும் தமது பாடல்களில் ஆண்டாள் குறிப்பிட்ட திருநாமத்தைக் குறிபிட்டுள்ளனர். கீழ்க்காணும் அட்டவணை ஆண்டாளின் குறிப்பிட்ட திருமாலின் திருநாமங்கள் மற்ற ஆழ்வார்களுடன் ஒத்திருப்பதைக் குறிக்கிறது.

அட்டவணை 1:

**ஆண்டாள் மற்றும் மற்ற ஆழ்வார்கள் குறிப்பிட்ட திருமாலின் திருநாம ஒற்றுமை.**

| திருமாலின் பெயர் பகுப்பு | திருநாமங்கள் | பாசுரம் | ஆழ்வார்கள் |
|---|---|---|---|
| தோற்ற அடிப்படையிலான பெயர்கள்<br>• திருமாலின் கரு நிறத் தோல் | கார்மேணியன் மெய்கருத்து முகில்வண்ணன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | காரொளி வண்ணன், காமர்சீர்முகில்வண்ணன் | திருமாலை | தொண்டிராடிப் பொடியாழ்வார் |
| | கருமேனியுடையம்மான் | பெரிய திருமொழி | திருமங்கையாழ்வார் |
| | முகில்வண்ணன் | இரண்டாந் திருவந்தாதி | பூதத்தாழ்வார் |

| | | | |
|---|---|---|---|
| • வெள்ளை நீல மேனி | பாலன்ன வண்ணன் மணிவண்ணன் பூவைப்பு வண்ணன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | மணிவண்ணன் | பெரிய திருமொழி | குலசேகராழ்வார் |
| • கண்கள் | செங்கன் பங்கயக்கண்ணன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | செங்கன்மால் | திருமாலை | தொண்டராடிப் பொடியாழ்வார் |
| | | முதல் திருவந்தாதி | பொய்கையாழ்வார் |
| | பங்கயக்கண்ணன் | திருவாய்மொழி | நம்மாழ்வார் |
| • கைகள் | தடக்கையன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | | பெரிய திருமொழி | திருமங்கையாழ்வார் |
| • தோள் | மால்வரைத் தோள் | திருப்பாவை | ஆண்டாள் |
| | மல்லணைந்தவரைதோள் | பெரிய திருமொழி | குலசேகராழ்வார் |
| பண்புக்குரிய பெயர்கள் | உத்தமன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | | இரண்டாந் திருவந்தாதி | பூதத்தாழ்வார் |
| | | திருச்சந்தவிருத்தி | திருமழிசையாழ்வார் |
| | தாமோதிரன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | புண்ணியன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | | பெரிய திருமொழி | குலசேகராழ்வார் |
| | | முதல் திருவந்தாதி | பொய்கையாழ்வார் |
| | வல்லான் | திருப்பாவை | ஆண்டாள் |
| | வல்லளான் | முதல் திருவந்தாதி | பொய்கையாழ்வார் |
| | செல்வா | திருப்பாவை | ஆண்டாள் |
| | செல்வமல்கு சீரன் | திருச்சந்தவிருத்தி | திருமழிசையாழ்வார் |
| | செல்வன் | மூன்றாந் திருவந்தாதி | பேயாழ்வார் |
| அருட்செயல்களைக் காட்டும் பெயர்கள் | நாரயணன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | | பெரிய திருமொழி | குலசேகராழ்வார் |
| | நாரண் | இரண்டாந் திருவந்தாதி | பூதத்தாழ்வார் |
| | பரமன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | | பெரிய திருமொழி | குலசேகராழ்வார் |
| | | திருவாய்மொழி | நம்மாழ்வார் |
| | மாயன்/மாமயன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | மாயன் | திருச்சந்தவிருத்தி | திருமழிசையாழ்வார் |
| | புள்ளரையன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | கேசவன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | கேசன் | திருச்சந்தவிருத்தி | திருமழிசையாழ்வார் |
| இளப் பருவ பெயர்கள் | குமரன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | | திருச்சந்தவிருத்தி | திருமழிசையாழ்வார் |
| | மகன் | மூன்றாந் திருவந்தாதி | பேயாழ்வார் |
| | | இரண்டாந் திருவந்தாதி | பூதத்தாழ்வார் |
| | இளஞ்சிங்கம் | திருப்பாவை | ஆண்டாள் |
| பொதுப் பெயர்கள் | தேவாதி தேவன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | | இரண்டாந் திருவந்தாதி | பூதத்தாழ்வார் |
| | தேவ தேவன் | திருச்சந்தவிருத்தி | திருமழிசையாழ்வார் |
| | மாதவன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | | இரண்டாந் திருவந்தாதி | பூதத்தாழ்வார் |
| | | முதல் திருவந்தாதி | பொய்கையாழ்வார் |
| | வைகுந்தன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | | திருவாய்மொழி | நம்மாழ்வார் |

திருமாலின் நிறம், உடல் உறுப்பு போன்ற தோற்றத்தைக் குறிக்கும் பெயர்களைத் திருப்பாவையின் வழி காண இயலுகின்றது. ஆகையால், திருமாலின் தோற்றத்திற்கு ஏற்ப பெயர்கள் அமையப் பெற்றுள்ளதைத் திருப்பாவையில் காணலாம். திருமாலின் நிறம் கருப்பாகும். இது தாபங்களைத் தீர்க்கும் வண்ணமாக அமைகின்றது. எனவே, ஆண்டாள் திருமாலை கார் மேணியன், மெய்கருத்து, முகில் வண்ணன் என்ற பெயர்களில் அழைக்கின்றாள். இவ்வகையில் ஆண்டாளைப் போலவே தொண்டிராடிப் பொடியாழ்வார் திருமாலையில்,

*"காரொளி வண்ணனே கண்ணனே"* (29:3)

என்று பாடியுள்ளதைக் காண இயலுகிறது. இன்னும், திருமொழியில் திருமங்கையாழ்வார், "கருமேனியுடையம்மான்" (111.10.73),

*"கருமுகில்போல் திகழ்வண்ண காமருசீர்முகில்வண்ணன்"* (111.10.8:2)

என்று குறிப்பிட்டுள்ளார். அதுபோல, பூதத்தாழ்வார் இரண்டாந் திருவந்தாதியில்,

*"முற்றும்விழங்கும் முகில்வண்ணன்"* (94:1) எனக் குறிப்பிடுகிறார்.

அடுத்து, திருமால் வெள்ளையும் நீலமும் கொண்ட திருமேனியாக அமைந்திருக்கின்றான் என்று ஆண்டாள் கருதுகின்றாள். அதில் வெண்மையானது விரோதிகளுக்கெனவும் நீலம் நல்லவர்களுக்கான குளிர்ச்சி தருபவை எனக் கருதப்படுகிறது. இதனால், திருமால் 'பாலன்ன வண்ணன்', 'மணிவண்ணன்', 'பூவைப்பூ வண்ணன்' (23:5) என்றும் அழைக்கப்படுகிறார். ஆண்டாளைப் போலவே திருமங்கையாழ்வார்,

*"முன்னை வண்ணம் பாலின் வண்ணம் முழுதும்"* (IV.9.8.1)

என்று பெரிய திருமொழியில் குறிப்பிட்டுள்ளார். குலசேகராழ்வாரும் பெருமாள் திருமொழியில்,

*"மணிவண்ண நம்மானைக் கண்டுகொண்டு என்"* (1.5.7)

எனவும், பூதத்தாழ்வார் இரண்டாந் திருவந்தாதியில்,

*"மாமறை யோர்க்கீந்த மணிவண்ணன் பாதமே"* (11.4.3)

எனவும் மணிவண்ணன் என்ற பெயரைச் சுட்டியுள்ளார். தொடர்ந்து, திருமாலின் கண்கள் செந்தாமரை போல் ஒத்திருப்பதால், சிவந்து இருப்பதால் இறைவனை 'செங்கன்' (1:6;22:5;30.7) என ஆண்டாள் அழைக்கின்றாள். ஆண்டாளைப் போல தொண்டராடிப் பொடியாழ்வார் திருமாலையில்,

*"சிக்கெனச் செங்கன்மாலே"* (35:2)

எனவும், பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதியில்,

"கருமேனிச் செங்கன்மால் நாமம்: (69.1)

எனவும் குறிப்பிடுகிறார். தொடர்ந்து, ஆண்டாள் பெருமாலை 'பங்கயக்கண்ணன்' (14:8) என்று அழைப்பதுபோல நம்மாழ்வார்,

*"பயிலும் சுடரொளி மூர்த்தியைப் பங்கயக்கண்ணனை"*

(111.7:1)

எனத் திருவாய்மொழியில் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்து, ஆண்டாள் திருமாலை 'ஆழிமழைக்கண்ணன்' (4:1) என்று அழைப்பதும் உண்டு. அதாவது, இறைவன் கடல்போல் கம்பீரமான தோற்றத்தையுடைய மழைக்கடவுள் (Sree, 2002) என்பதால் இப்பெயர் எடுத்து இயம்புகிறது எனலாம். மேலும், திருமாலுக்குப் பெரிய கைகள் இருப்பதால் 'தடக்கையன்' (14:7) என்று திருப்பாவையில் குறிப்பிடப்படுகிறது. திருமங்கையாழ்வாரும் 'விறலாழித் தடக்கையன்' (111:10.2:2) என்று பெரிய திருமொழியில் குறிப்பிட்டுள்ளார். இன்னும், மலை போன்ற தோள்கள் உள்ளதால் 'மால்வரைத் தோள்' (30:6) என்று அழைப்பதும் திருப்பாவையில் காண முடிகின்றது. அதுபோல குலசேகராழ்வாரும் "மல்லணைந்தவரைத்தோளா!" (9.2.2) என்று திருமொழியில் குறிப்பிடுகிறார்.

**பண்புக்குரிய பெயர்கள்**

திருமால் சிறப்புக்குரிய பண்புகளைக் கொண்டுள்ளார். இதனை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் திருப்பாவையின் வழி அறிய முடியகிறது. ஆண்டாள் திருமாலை 'உத்தமன்' (3:1) என்று அழைக்கின்றாள். 'உத்தமன்' தான் அழிந்தாலும் பிறர் வாழ வேண்டும் என்று நினைப்பவன். திருமால் தன் தேவைக்காக வாமனனாக வந்து தானம் கேட்கவில்லை. மாறாக, தேவர்களுக்காகப் பிறர் காரியம் செய்ய தன்னைத் தாழ்த்திக் கொண்டான் என்பதால் உத்தமனான். இதனையே ஆண்டாள்,

*"ஓங்கி உலகளந்த உத்தமன்"*

என்று குறிப்பிடுகிறார். பூதத்தாழ்வாரோ இரண்டாந் திருவந்தாதியில்,

*"உத்தமன்பேர்"(39:1), "உறுங்கண்டாய் நன்னெஞ்சே யுத்தமன் நாற்பதம்" (77:1)*

என்று குறிப்பிட்டுள்ளார். அதுபோல திருமழிசையாழ்வார், திருச்சந்திவிருத்ததில், "ஓசித்துகாந்த வுத்தமா" (58:2) என்று குறிப்பிடுகின்றார்.

தொடர்ந்து, 'தாமோதரன்'(5:4) என்ற பெயரினையும் திருப்பாவையின் வழி அறியலாம். தாமங்கள் என்றால் உலகங்கள். உலகங்களைத் தம் உதரத்தில் வைத்துக்காப்பவர் என்பதால் இப்பெயர் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் பகவான் கிருஷ்ணனாக அவதரித்தப் போது, பல குறும்புகள் புரிந்ததால், யசோதை கோபம் கொண்டு இடுப்பில் கயிறு கொண்டு கட்டினர். இங்கு 'தாமம்' என்றால் கயிறு மற்றும் 'உதரம்' என்றால் வயிறு என்றும் பொருள்படுகிறது.

அடுத்து 'புண்ணியன்' (10:4) என்ற பெயரும் பெருமாளுக்கு ஆண்டாள் வழங்கியுள்ளாள். இவ்வுலகின் தலைவனாக விளங்கும் திருமால் நம்மிடம் எதனையும் எதிர்பார்க்கவில்லை. மாறாக, அவனைப் போற்றி வணங்குபவர்களுக்குப் பலன்கள் அள்ளித் தருவதால் இப்பெயரோடு திகழ்கிறான் என்று கருதப்படுகிறது. ஆண்டாளைப் போலவே பெருமாள் திருமொழியில் குலசேகராழ்வார்,

*"புக்கிலங்கு சீரல்லால் புக்கிலன்காண் புண்ணியனே" (5:8:4)*

எனவும் முதல் திருவந்தாதியில் பொய்கையாழ்வார்,

*"பொன் திகழ மேனிப் புரிசடையும் புண்ணியனும்" (98:1)*

எனத் திருமாலையில் அழைக்கப்படுகின்றார்.

தொடர்ந்து 'வல்லான்' என்ற பெயரும் திருப்பாவையில் இடம்பெற்றுள்ளது. கண்ணனின் விரோதிகள் அவனை அழிக்கத் திட்டம் தீட்டினாலும், அத்திடத்தை முறியடித்து அவர்களை வெல்லுவான். இன்னும்,

*"வால்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க வல்லானை"(15:7)*

என்று ஆண்டாள் குறிப்பிடுகிறாள். 'வல்லான்' என்ற சொல் முதலாவதாக திருவந்ததியில் பொய்கையாழ்வாரும் குறிப்பிட்டுள்ளார். இதனை,

*"வல்லளான் கைக்கொடுத்த மாமேனி மாயவனுக்கு'*

என்ற வரி வழி அறிய இயலுகிறது.

ஆண்டாள், 'செல்வா' (17:7) என்ற பெயராலும் திருமாலை அழைக்கிறாள். திருமாலின் அறுவகை பண்புகளில் ஐஸ்வரியம் உடமையும் ஒன்றாகும். செல்வத்திற்குரிய திருமகளைத் தன் மார்பில் கொண்டதால் செல்வா என்ற பெயரினாலும் திருமால் சுட்டப்பெறுகின்றான் (Kandasamy, 1994). ஆண்டாளைப் போலவே திருமிசையாழ்வாரும் திருச்சந்தவிருத்ததில், "செல்வமல்கு சீரினாய்" (15:3) எனவும், மூன்றாந் திருவந்தாதியில் பேயாழ்வார், "பொழிலளத்த புள்ளூர்திச் செல்வன்" (7:2) என்று திருமாலை அழைக்கின்றனர்.

இறுதியாக, ஆண்டாள் கண்னனை சீர்க் கோவிந்தா(27:1), கோவிந்தா (28:4, 29:5). சீர் என்பது சிறப்பு நிறைந்ததைக் குறிக்கின்றது. கோவிந்தன் என்பது பசுக்களைக் காப்பவன் என்றும், சீவனின் முக்கால நிலையையும் அறிபவர் என்றும் குறிக்கின்றது. அதோடு

கோவிந்தனின் திருப்பெயரை உச்சரித்தால் உடல் ஆரோக்கியம் கூடுவதோடு, ஆத்மாவுக்கு ஞானத்தையும் அளிக்கின்றது. ஆண்டாளைப் போல நம்மாழ்வார் திருவாய்மொழியில்,

*"நிறத்தால் தெறித்தாய் கோவிந்தா!"* (1.5.5:2)

என்று குறிப்பிட்டுள்ளார்.

**அருட்செயல்களைக் காட்டும் பெயர்கள்**

இப்புவியில் பிறந்த மனிதர்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ முடியாமல் தவிக்கும் போது , இறைவன் பல உருவங்களில் தோன்றுகிறான். கருனையின் திருவுருவமே திருஅவதாரம் என்பதை புராணங்களின் வழி அறியலாம். திருப்பாவையில் 'நாரயணன்' (1:7;10:3) என்ற திருபெயரின் பொருள் எல்லாவற்றிலும் தானே நிறைந்து இருப்பவர், அனைத்தும் தாமே என்றும், உள்ளேயும் வெளியேயும் தாமே நிறைந்திருப்பவர் என்பதாகும்(Jayasree Mugambikai,2001)9. 'நாராயணன்' என்ற பெயரில் 'நாரம்' என்பது தண்ணீரைக் குறிக்கின்றது. தண்ணீரில் பள்ளிக் கொண்டிருக்கும் காரணத்தாலும் அவர் 'நாரயணன்' என்று சுட்டப்பெறுகிறார். குலசேகராழ்வார் பெருமாள் திருமொழியில்,

*"நாத்தழும்பெழ நாரணாவென்றழைத்து மெய்தழும் பத்தொழு"* (2:4;3)

என்று குறிப்பிட்டுள்ளார். அதுபோல், இரண்டாந் திருவந்தாதியில் பூதத்தாழ்வார்,

*"ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு"*(1:3)

என்று குறிப்பிடுகின்றார்.

திருப்பாவையின் நோக்கங்களில் திருபாற்கடலில் உறங்குவது போல யோகு புரிகின்ற இறைவனின் திருவடிகளை நினைத்துப் பாடுதல் ஆகும். இதனையே, ஆண்டாள்,

*'பாற்கடலுள் பையத்துயின்ற பரமனபாடி"*(2:2)

எனக் குறிப்பிட்டுள்ளார். பரமன் என்ற திருப்பெயரைப் பெரிய திருமொழியில்,

*"ஆலிலையில் பள்ளிக்கொள்ளும் பரமனிடம்"* (IV.1.6.2)

என்று காண முடிகிறது. அதுமட்டுமின்றி நம்மாழ்வார் திருவாய்மொழியில்,

*"ஆளும் பரமனைக் கண்ணனை"*(2:3)

என்று 'பரமன்' என்ற திருநாமத்தில் திருமாலை சூட்டியுள்ளார்.

திருப்பாவையில் 'மாயன்', 'மாமயன்' (5:1;15:8;16:5) என்ற திருப்பெயர்களையும் அறிய முடிகின்றது. மாயச் செயல்களைச் செய்வதால் மாயன் என்று குறிப்பிடுகின்றாள். மாயையால் உயிர்களை மயக்குபவன் என்பதால் மாமயன் என்றும் அழைக்கப்படுகிறது. அதோடு, அபலைப் பெண்களைத் தன் வசப்படுத்திக் கொள்ளுவதற்குச் சாதனமாகப் பல ஆச்சரியக் குணங்களைக் கொண்டதாலும் மாமாயன் என்று ஆண்டாள் குறிப்பிடுகின்றாள். இவ்வாறு திருச்சந்நவிருத்ததில் திருமழிசையாழ்வார்,

*"ஒன்றிரண்டு தீயுமாகி ஆயனாய மாயனே"*

*ஆதியாகி யாயனாய மயமென்ன மாயனே"* (7:3)

என்ற தொடரில் திருமாலை மாயன் எனக் குறிப்பிட்டுள்ளார். இதனைவிடுத்து, திருமாலை 'புள்ளரையன்' (6:1) என்று அழைப்பதையும் திருப்பபாவை எடுத்துரைகின்றது. 'புள்' என்பது கருடனைக் குறிக்கின்றது. கருடனின் தலைவன் திருமால் என்பதல் 'புள்ளரையன்' என்று அழைக்கப்படுகிறது. அதோடு, கொக்கு வடிவில் கண்ணனைக் கொல்ல வந்த பகாசுரனை அழித்தமையாலும் 'புள்ளரையன்' எனப் பெயர் பெற்றுள்ளார்.

அடுத்ததாக, 'கேசவன்' (7:7;30:1) என்பதும் அருட்செயலுக்குரிய பெயராகும். கேசி என்னும் குதிரை வடிவில் வந்த அரக்கனைக் கொன்றதால் 'கேசவன்' என்ற பெயரைப் பெற்றான் என்று திருப்பாவை கருதுகின்றது. மேலும், 'கேசவன்' என்பது "கருத்தச் சுருண்ட அழகிய கூந்தலை உடையவன்" எனவும் பொருள்படும் (Chittan, 1994)12.இதனைக் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடர்,

*"நீண்டு, குழன்று, நெய்த்து இருண்டு*

*நெறித்து, செறித்து, நெடுநீலம்*

*பூண்டு, புரிந்து, சரிந்து, கடை*

*சுருண்டு, புகையும் நறும்பூவும்*

*வேண்டும் அல்ல என, தெய்வ*

*வெறியே கமழும் நறுங்குஞ்சி"*

*(கம்ப, சுந்தர காண்டம்,உருக்காட்டுபடலம்:57)*

என அழகிய மணமுடைய கூந்தலைப் பாடி மகிழ்கின்றார். இத்தகைய கேசத்தை உடையதால் கேசவனாயினான். அதுமட்டுமின்றி, 'கேசவா' என்ற நாமத்தை உச்சரித்தால் ஒருவர் செய்த பாவங்கள் அனைத்தும் தீரும் என்பதும் பொருளாகும் (Devarajan, 2002). திருப்பாவையில் ஆண்டாள் கேசவன் என்று அழைப்பது போல, திருச்சந்தவிருத்தியில் திருமழிசையாழ்வார்,

*"பேசு வாழி கேசனே" (61:4)*

என்றும். முதல் திருவந்தாதியில் பொய்கையாழ்வார்,

*"தாயவனைக் கேசவனைத் தண்டுழாய் மாலைசேர்" (100:3)*

என்ற பெயரைக் கொண்டும் திருமாலை அழைக்கின்றனர்.

### இளம் பருவப் பெயர்கள்

'குமரன்' அதாவது மகன் என்ற திருப்பெயர்கள் நந்தகோபனுக்குப் பிள்ளையாய் பிறந்தவன் என்பதனைக் குறிக்கின்றது. எனவேதான்,

*"கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன் குமரன்"(1:4)*

எனவும்,

*"ஆற்றப் படைத்தான் மகனே!"(21:3)*

எனவும் அழைப்பதை அறிய முடிகின்றது. திருப்பாவையில் ஆண்டாள் குறிப்பது போல திருமழிசையாழ்வாரும் நான்முகன் திருவந்தாதியில், குமரன் என்று சுட்டுவதை அறிய முடிகின்றது. இதனை,

*"போம்குமரன் நிற்கும் பொழில்வெங்கட் மலைக்கே போம்குமரா ருள்ளீர் புரிந்து"*

என்ற வரிகளில் அறியலாம்.

மேலும், 'மகன்' என்று திருப்பாவையில் குறிப்பிட்டுள்ளதைப் போல, பூதத்தாழ்வர், பேயாழ்வார் பாசுரங்களின் வழியும் இதனை அறிய முடிகின்றது. இதனை:

*"மாவாய் பிளந்தமகன்" (11.28.4)*

*"மகனொருவர்க் கல்லாத மாமேனி மாயன்*

*மகனாமவன்கன்றான் காதல்-மகனை" (111.92:1)*

என்ற வரிகளில் அறியலாம்.

'இளங்சிங்கம்' *(1:5)* என்ற பெயரானது, யசோதைப் பிராட்டிக்குச் சிங்கத்தைப் போன்று காவலாளியாக் இருப்பதால் "யசோதை யிளஞ்சிங்கம்' என்ற திருப்பெயரால் அழைத்தனர், தொடர்ந்து கண்ணன் வாழ்ந்த நந்தகோகுலம் எளிய ஆயர்கள் வசிக்கும் இடமகும். அப்படிப்பட்ட நந்தகோகுலத்தில் தோன்றி, இருட்டிலிருந்த ஆயர்களைத் தீபம்போல் வந்து வாழ வைத்ததால் அணிவிளக்கு என்றும் அழைத்தனர்.

### திருமாலின் பொதுப் பெயர்கள்

திருமாலின் பொதுப் பெயர்களில் 'தேவாதி தேவன்' என்பது தேவர்களுக்கெல்லாம் தலைவன் என்பதனைத் திருப்பாவை குறிக்கின்றது. கண்ணன், தேவரும் அசுரரும் பாற்கடலைக் கடைவதற்குக் காரணமாக இருந்தவனாவன். தேவர்கள் அமுதம் வேண்டி பாற்கடலைக் கடைந்தபோது வெளிப்பட்ட விஷத்தைக், ருத்திரனைப் பாத்திரமாக வைத்து விஷ்ணு அருந்தினார் என்று 'ரிக்' வேதம் சொல்கின்றது. விஷ்ணு அந்தர்யாமியாய் சிவனுக்குள்ளிருந்து நஞ்சை உண்ட காரணத்தால் பூதத்தாழ்வார்,

*"மாகடல் நஞ்சுண்டான் தனக்கும் இறையாவான்" (11.96:3-4)*

என்று சிவனுக்கும் சுவாமியாய் இருப்பவன் விஷ்ணு என்பதால் 'தேவாதி தேவன்' என்பதால் தேவாதி தேவன் என்று பெயரிடப்பட்டுள்ளார். ஆண்டாளைப் போல திருமழிசையாழ்வாரும்

திருச்சந்தவிருத்தில்,

*"ஐந்துமூன்று மொன்றுமாகி நின்றவாதி தேவனே"(3:2)*

*"சிங்கமாய் தேவதேவ தேனுலாவு மென்மலர்" (24:3)*

என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், லட்சுமி பிராட்டியின் கணவன் திருமால் என்பதைச் சுட்டும் ஆண்டாள், மாதவன் என்ற பெயராலும் கண்ணனை அழைக்கின்றாள். 'மா' என்றால் லட்சுமி என்றும் 'தவன்' என்றால் கணவன் என்றும் பொருள்படும். ஆக, லட்சுமி பிராட்டியின் கணவன் என்பதே மாதவன் என்ற திருநாமத்தின் பொருளாகும். இதனைப் பொய்கையாழ்வார்,

*"வரத்தால் வலிநினைந்து மாதவ நின்பதம்"(90:1)*

எனவும், பூதத்தாழ்வார் 'மாதவன்பேர்' *(39:3)* எனவும் மாதவன் என்ற திருப்பெயரைப் பயன்படுத்தியுள்ளார்.இன்னும், 'வைகுந்தன்' என்ற பெயரும் திருப்பாவையில் காண இயலுகிறது. 'வைகுந்தன்' என்றால் உலகத்தை ஆள்பவர் எனப் பொருளாகும். இதனை நம்மாழ்வார் திருவாய்மொழியில், *"வைகுந் தன்எம் பெருமானே"(1.5.4:4)*

என்று பாடியுள்ளதைக் காண இயலுகிறது.

### 8.0 பரிந்துரைகள்

திருப்பாவையின் காணப்படும் திருமாலின் திருப்பெயர்கள் எனும் இவ்வாய்வேடு, திருமால் பெயர் ஏற்றதன் காரணத்தை எடுத்து இயம்புகிறது. இவ்வகையில் எதிர்கால ஆய்வுக்காகச் சில தலைப்புகள் மும்மொழியப்படுகின்றன.

தம்பதியனர் தம் பிறக்கும் பிள்ளைகளுக்கு இறைவனின் திருநாமத்தை இடுவது உண்டு. ஆனால், அவர்களுக்கும் அந்நாமத்தின் பொருள் அறிந்தவர்களா அறியாதவர்களா எனும் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். இதன் வழி பிள்ளைகள் தன் பெயரின் மகிமையை அறிய இயலும்.

குறிப்பிட்ட இறைவனின் திருநாமம் ஒரு கடவுளைத் தாண்டி மற்றற்ற இறைவனுக்கும் இருப்பதை நோக்க இயலுகிறது. உதாரணமாக குமரன் என்ற திருப்பெயர் விஷ்ணு பகவானுக்கு இருப்பது போல் முருகக் கடவுளுக்கும் இருப்பதையும் அறிய இயலுகிறது. ஆக, இரு மாறுபட்ட கடவுளின் திருநாமம் ஒரே சொல்லாக இருப்பதின் காரணத்தை ஆராய்தல் சிறப்பு.

உலகில் பல நாடுகளில் இந்துக்கள் வாழ்கின்றனர். இந்து சமய சார்புடைய கடவுள் சமய நூல்களை விடுத்தும் தமிழ்மொழியையும் விடுத்து வெவ்வேறு வழக்கு மொழி பெயர்களாக அமைய பெற்றிருக்கலாம். ஆக, ஆய்வாளர்கள் பல்லின மொழியில் குறிப்பிட்ட இறைவனின் பெயர் மற்றும் அதன் காரணத்தையும் அறியலாம்.

வைணவம் போல இந்து சமயம் மேலும் 5 பிரிவுகளைக் கொண்டவை. ஆய்வாளர்கள் இவ்வாய்வேட்டில் திருமாலை ஆராய்ந்தது போல மற்ற பிரிவுகளில் காணப்படும் இறைவைனின் திருநாமத்தை ஆராய்வதின் வழி, இந்து சமய பிரிவுகளும் அதனுள் காணப்படும் திருநாமங்களைச் சரியான சான்றுகளுடன் எடுத்து இயம்பலாம்.

### 9.0 முடிவுரை

ஓர் உருவமும் ஒரு பெயரும் இல்லாத இறைவனுக்குப் பல பெயர்களைக் கொடுத்து, ஆண்டாள் பக்தி மேலிட இறைவனைப் போற்றி அழைப்பதைத் திருப்பாவையின் வழி அறியலாம். திருப்பாவையைப் போல ஆழ்வார்களும் இறைவனை வெவ்வேறு திருநாமத்தைக் கொண்டு அழைத்துள்ளதையும் காண இயலுகிறது. ஆகவே, பிறந்த பயனை அடைவதற்க்கு ஒவ்வொருவரும் பகவானின் திருநாமங்களைச் சொல்ல வேண்டும். சொல், செயல், சிந்தை அனைத்திலும் இறைவனை நினைத்தே வழிபடுதல் வேண்டும்.

**References**

Annangkarasariyar Swamy. (1952). *Tiruppāva*i. Kumbakonam: Forward Printings..

Balasubramaniam, S. (1994). Āṇṭāḷ. Chenai: Paari Centre.

Chittan. (1994). *Mētai Kampaṉum Kōtai Pirāṭṭiyum [Genius Kampaṉ and Kothai Pirāṭṭi]*. Chennai: Vanathi Publications.

Devarajan. (2002). *Vaiṇavamum Aḻvārkaḷum Part 2.* Chennai: Sree Shenbaga Publications.

Devarajan. (2002). *Vaiṇavamum Aḻvārkaḷum Part 1*. Chennai: Sree Shenbaga Publications.

Jayasree Mugambikai. (2001). *Tivya Nāma Kataikaḷ [ The Stories of Devotional Names*]. Chennai: Sree Hindu Publications.

Kamalakannan,R.V. (1952). *Nālāyirat Tivviyap Pirapantam:Source and Explanation Part 1 [Four Thousand Divine of Pirapantam]*. Chennai: Varthamalan Printings.

Kandasamy, N. (1994). *Caṅka Ilakkiyattil Pakti [Devotion in Caṅka Literature].* Kuala Lumpur: Thirumagal Press.

Kannan, S. (1994). *Periyāḻvār,* Āṇṭāḷ *Pācuraṅkaḷ [ Rhyme of Periyāḻvār,* Āṇṭāḷ *]: Social, Religious and Cultural Study.* Chennai: Vijayalakshmi Publications.

Periyaswamy, B. (2020) Analyzing the Devational Biology of Andalusian Lice-A Study. *International Tamil Research Jurnal 2,* 119-130. Retrieved From https://doi.org/10.34256/irjt20213

Sinivasan. (2001). *Types of Tivviyappirapanta Literature*. Chitambaram: Meyyapan Tamil Research Centre.

Soundra. (1978). *'Tiruppāvai' 10th Seminar Review Index.* Annamalai Nagar: Agriculture University of Tamil Nadu.

Sree. (2002). *The History Of* Āḻvārkaḷ *Part 8*. Chennai: Genaral Publications.

Sujatha. (2000). *A Simpely Introduction of* Āḻvārkaḷ. Chennai: Vanathi Publications.

Tharmika, M. (2016). *A Comparative Analysis of The Ideas of Mystical Realities in Andal and Song of Songs.* Sri Lanka: Eastern University.